DEPOSITION OF THE WITNESS

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RAMESWARAM

**Case no: CC.No. 58/2023**

**prosecution witness: Pw -5**

| | | |
|---|---|---|
| Name | : | Caste |
| Fathers Name | : | calling |
| Village | : | Religion |
| Taluk | : | Age |

**Accused absent petition filed**

வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண்.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | மந்திரகுமார் | ஜாதி | : |
| க/பெ. | : | | தொழில் | : |
| கிராமம் | : | | சமயம் | : |
| தாலுகா | : | | வயது | : |

**<u>05.12.2023</u>**

<u>முதல் விசாரணை:-</u>

1. நான் பாம்பன் தரவைத்தோப்பில்வசித்து வருகிறேன். கூலி வேலைசெய்து வருகிறேன். கடந்த 15.06.2022-ம் தேதி சுமார் 12 மணியளவில் நானும், அசோக் என்பவரும் பாம்பன் தரவைத்தோப்பில் நின்று கொண்டிருந்த போது பாம்பன் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் அங்கு வந்து சம்பவ இடமான வேலம்மாள் என்பவரது வீட்டின் முன்பு பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தார். அந்த பார்வை மகஜரில் நானும் , அசோக் என்பவரும் கையொபபம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையது. **அந்த கையொப்பம் அ.சா.ஆ- 2 ஆகும்.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

1. பாம்பன் காவல் நிலையத்தில் இருந்து ஏட்டையா தான் வந்திருந்தார் என்றால் சிறப்பு சார்பு ஆய்வாளர் வந்திருந்தார். திருமலை கண்ணன் வீட்டிற்கும் நான் நின்று கொண்டிருந்த இடத்திற்கும் 200 அடி தூரம் இருக்கும். சிறப்பு சார்பு ஆய்வாளர் எங்களை அழைத்து கையொப்பம் போடசொன்னார்கள் அதனால் போட்டு கொடுத்தோம். வேறு இந்த வழக்கு பற்றி விபரம் எனக்கு தெரியாது. வரைபடம் வரைந்த ஆவணத்தில் மட்டும் தான் நான் கையொப்பம் செய்தேன். வேறு எந்த

ஆவணத்திலும் கையொப்பம் செய்யவில்லை. சிறப்பு சார்ப ஆய்வாளர் கேட்டுக்கொண்டதால் தான் நான்  கையொப்பம் செய்ய வந்துள்ளேன் என்றால் சரிதான்.

DEPOSITION OF THE WITNESS

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RAMESWARAM

**Case no: CC.No. 58/2023**

**prosecution witness: Pw -6**

| | | |
|---|---|---|
| Name | : | Caste |
| Fathers Name | : | calling |
| Village | : | Religion |
| Taluk | : | Age |

**Accused absent**

வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | அசோக் | ஜாதி | : | |
| க/பெ. | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுகா | : | | வயது | : | |

**05.12.2023**

முதல் விசாரணை**:-**

1. நான் பாம்பன் மொட்டையன்பனையில் வசித்து வருகிறேன். ஆட்டோ ஓட்டுனராக வேலைசெய்து வருகிறேன். கடந்த 15.06.2022-ம் தேதி சுமார் 1 மணியளவில் நானும், மந்திரகுமார் என்பவரும் வேலம்மாள் வீட்டின் அருகே நின்று கொண்டிருந்த போது பாம்பன் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் அங்கு வந்து சம்பவ இடமான வேலம்மாள் என்பவரது வீட்டின் முன்பு பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தார். அந்த பார்வை மகஜரில் நானும் , மந்திரகுமார் என்பவரும் கையொபபம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது. **அந்த கையொப்பம் அ.சா.ஆ- 3 ஆகும்.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

1. பாம்பன் காவல் நிலையத்தில் இருந்து அன்றைய தினம் ஏட்டையா தான் பாம்பன் தரவைத்தோப்பிற்கு வந்திருந்தார். அந்த ஏட்டையாவுடன் வேறு யாரும் வரவில்லை அவர் ஒருவர் மட்டும் தான் வந்திருந்தார். திருமலைகண்ணன் வீட்டிற்கும், நாங்கள் நின்று கொண்டிருந்த இடத்திற்கும் சுமார் 10 அடி தூரம் இருக்கும். ஏட்டையா இங்கு என்ன பிரச்சனை நடந்தது என்று கேட்டுவிட்டு உடனடியாக சென்றுவிட்டார். எங்களை காவல் நிலையம் வரசொல்லி அங்கு வைத்து கையொப்பம் வாங்கினார்கள். நானும், அ.சா.5ம் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம்

செய்தோம். நான் வரைபடம் வரைந்திருந்த  பேப்பரில் மட்டும தான் கையொப்பம் செய்தோம் வேறு எந்த ஆவணத்திலும் கையொப்பம் செய்யவில்லை.